# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 6 | பிப்ரவரி 1993 | இதழ் 2




வெளியிடுவோர் :

**ஈரோடு கிறிஸ்துவின் சபையார்**

**2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.**

''திருமறை ஆசான்'' ஆசிரியர்

## அமரர் E.Z. செல்வநாயகம் அவர்கள்



**தோற்றம் : 15.6.1931 மறைவு : 9.2.1993**

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002 (ரயில் குட்செட் சமீபம்)

### நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை
,, : பகல் 11-00—12-00...ஞாயிறு பள்ளி
,, : மாலை 5-30—6-30...திருமறை ஆய்வு & கலந்துரையாடல்
வியாழன் : மாலை 7-15—8-30...வேத ஆய்வு வகுப்புகள்
வெள்ளி : மாலை 7-00—9-00...ஜெப ஆராதனை

THIRUMARAIAASAAN

Editor
E. Z. SELVANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002, Tamilnadu, India:
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 6 February—1993 Issue 2

# "திருமறை ஆசான்" இதழ் ஆசிரியர் அமரர் சகோ. E.Z. செல்வநாயகம் அவர்கள் ஒரு கண்ணோட்டம்!

**'பகுத்தறிவுப் பகலவன்'** என்று பார்போற்றும் **ஈரோட்டுத் தந்தை பெரியார்** அவர்கள் பிறந்த மண்ணில் தோன்றியவர் தான் **பகுத்தறிவு நாயகம்,** சகோ. E.Z. **செல்வநாயகம்** அவர்கள்.

இவர் ஈரோட்டிற்கு அருகிலுள்ள **எல்லிஸ்பேட்டை** என்ற நல்லூரில் **சகரியா -கனகமணி** தம்பதியருக்கு 1931-ல் ஆறாவது குழந்தையாகப் பிறந்தவர். அமரர். E.Z. **செல்வநாயகம்** ஆவர். இவர் தனது ஆரம்பக்கல்வியை தனது கிராமப் பள்ளியிலும் அடுத்த உயர்நிலைக் கல்வியை **சேலம்** London Mission உயர்நிலைப் பள்ளிகளிலும் பெற்றார். தனது பள்ளி இறுதிவகுப்பை முடிக்கும் முன்னரே Royal Indian Navy என்ற கப்பற்படையில் பணிபுரியும் வாய்ப்பைப் பெற்று அங்கு பத்து ஆண்டுகாலங்கள் சிறப்புடன் பணிபுரிந்து தனது 28-வது வயதில் அப்பணியிலிருந்து ஓய்வுபெற்று சிறப்புத் தகுதியின் அடிப்படையில் ஓய்வூதியம் பெறும் வாய்ப்பைப் பெற்று தனது பகுதியில் வாழும் ஏழை-எளிய மற்றும் ஒடுக்கப்படும் சமுதாய மக்களுக்கு சேவை செய்யும் நேர்க்கோடு கொங்கு நாட்டிற்கு வந்தார்.

அங்கு மக்களை ஒன்றுபடுத்தி கூட்டுறவுப் பால் பண்ணையை நிறுவி தீண்டத்தகாதவர்கள் என்று கூறப்படும் மக்களின் பால் உற்பத்திச் சங்கத்திலிருந்து பால் விநியோகம் செய்யும் ஓர் புரட்சியை ஏற்படுத்தி சாதனை புரிந்தார். மேலும் ஆதிதிராவிட மக்களால் நடத்தப்பட்டு வந்த கூட்டுறவு போக்குவரத்துக்கழகம் ஒன்று நலிவடைந்து நடத்தப் பெறாமல் நஷ்டத்தில நடந்து கொண்டு வந்ததை கண்ணுற்று அதை சீர்படுத்தி நடத்த இவர் முனைந்ததன் பயனாக இப்போக்குவரத்துக் கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்கும் கட்டாயம் இவருக்கு ஏற்பட்டது. வழக்க

மாக சட்டமன்ற உறுப்பினர்கள் அதற்கு இணையான தகுதியை உடையவர்கள் மட்டுமே ஏற்கக்கூடிய தலைமைபொறுப்பு இவரைத் தேடி வந்ததென்றால் இவரது திறமை-நாணயம் சேவை மனப்பான்மை இவற்றை நாம் சொல்லித் தெரியவேண்டியதில்லை. இதைத் தொடர்ந்து Ex-Service Men transports கழகத்திலும் இவர் நிர்வாகப் பொறுப்பை மேற்கொள்ள அழைக்கப்பெற்றார். இவரும் ஒரு Ex-Service Man என்பதால் அக்கழகத்திலும் பொறுப்புடனும் சிறப்புடனும் செயல்பட்டார்.

இக்கால கட்டத்தில் இவரது சமூக சேவையோடு இறைப் பணியிலும் இவருக்கு ஆர்வம் ஏற்பட இறையியலில் மேற்படிப்பு படிக்கும்வண்ணம் ''சென்னை வேதாகமக் கல்லூரியில் சேர்ந்து பயின்றார். கல்லூரி படிப்பின் மத்தியிலும் இவர் இறைசேவையைத் தொடர்ந்து செய்துவந்தார்.

இவர் கொங்கு நாட்டில் பிறந்து வாழ்ந்து வருபவரானாலும் இவர் **தஞ்சைத் தமிழ்** பேசுவது இவரது தனி சிறப்பு! தனது கல்லூரி படிப்பை முடித்தப் பின்னர் தான் ''கற்று நிச்சயத்த சத்தியத்தினின்று வழுவாது உறுதியாய் நின்று'' இறுதி வரை இறைப் பணியைத் தொடர்ந்து செய்து வந்தார்.

இவருக்கு இரண்டு மகன்களும் இரண்டு மகள்களும் ஆண்டவரால் கொடுக்கப்பட்டது. தனது முதல் மகனை கணிதப் பட்ட படிப்பிற்குப் பின்னர் இறையியல் பயிற்சியளித்து இறைப்பணியில் ஈடுபட வைத்து இன்று மிகச் சிறந்த இறைப்பணியாளர்களுள் ஒருவராகத் திகழ வைத்திருப்பது இவரது மாண்பிற்கு ஓர் எடுத்துக் காட்டு. இவரது துணைவியார் திருமதி. **இராஜமணி** அம்மையார் ஓர் சிறந்த கிறிஸ்தவராக இவரது இறைப் பணியிலும் துணையாக நின்றது இவருக்கு ஒரு பேருதவி.

கிறிஸ்தவ நல்லுலகத்தால் போற்றப்படும் **''திருமறை ஆசான்''** மாத இதழை சிறந்த முறையில் வெளியிட அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் அதன்பயனாக அவர் அடைந்த வெற்றியையும் வார்த்தைகளால் அடக்கிவிட முடியாது. இன்று தமிழில் வெளிவரும் ஒரே கிறிஸ்தவ இதழ் **திருமறைஆசான்** மட்டுமே என்று சென்னை சகோதரர் ஒருவர் அண்மையில் (26.1.93) ஈரோட்டில் நடைபெற்ற **''திருமறை ஆசான்''** வாசகர் கருத்தரங்கில் குறிப்பிட்டது. இதன் சிறப்பை வெளிப்படுத்தியது. சகோ E.Z.S. அவர்கள் **'திருமறைத் துணைவன்,** என்னும் ஓர் நூலையும் வெளியிட்டுள்ளார். **தமிழ் உலக ஆத்தும ஆதாயத்திட்டம்** இவர் விவிலியத்திலிருந்து இம்மியும் மாறாது ஏற்படுத்திய சிறப்புத் திட்டம் பணம் - பதவி இவைகள் இச்சகோதரனின் கிறிஸ்தவ வாழ்க்கையில் குறுக்கிட என்றுமே இவர் அனுமதித்ததில்லை.

தமிழ் மண்ணில் மூட நம்பிக்கையின் ஊற்றுக்கண்களை அடைத்து மெய்கிறிஸ்தவத்தை மீட்டு அமைப்பதே இப்பகுத்தறிவு-நாயகத்தின் விடா முயற்சியாக இருந்து வந்தது.

இன்று நம்மை விட்டு அமரர் ஆன சகோதரர் அவர்கள் விட்டுச் சென்ற பணியை அவர் வழியில் நாம் தொடருவதே நாம் அவருக்கு செலுத்தும் அஞ்சலியாகும்.

**S.S. இராஜன்**

## இயேசு கிறிஸ்து மூன்று பகல் மூன்று இரவு கல்லறையில் இருந்தார் என்று வேதாகமம் கூறுகிறதே. அப்படியானால் வெள்ளி மாலையிலிருந்து ஞாயிறு விடியற்காலம் வரை எப்படி மூன்று இரவு மூன்று பகல் ஆகும்?

---

யோனா இரவும் பகலும் மூன்று நாள் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தது போல மனுஷகுமாரனும் இரவும் பகலும் மூன்றுநாள் பூமியின் இருதயத்திலே இருப்பார் என்று இயேசு கூறினார். (மத் 12:40)

''அது முதல் இயேசு தாம் எருசலேமுக்குப் போய், மூப்பராலும், பிரதான ஆசாரியராலும், வேதபாரகராலும் பல பாடுகள் பட்டு கொலையுண்டு மூன்றாம் நாளில் எழுந்திருக்க வேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார். (மத் 16:21)

இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தமாக "இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" என்றார்.

அப்பொழு யூதர்கள் ''இந்த ஆலயத்தைக்ககட்ட நாற்பத்தி ஆறு வருஷம் சென்றதே, நீர் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்புவீரோ'' என்றார்கள்,

அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்து பேசினார் (யோவான் 2:19-22)

ஆகவே மூன்று பகல்/மூன்று இரவு என்று சொல்லப்படும் கால அளவுக்கு மூன்றாம் நாள் அல்லது மூன்று நாளைக்குள் என்றே பொருள் கொள்வது பொருத்தமாயிருக்கும் என்று தோன்றுகிறது. வேறு ஒரு 'இடத்தில் இயேசு அடக்கம் பண்ணப்பட்டு வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. (1 கொரி 15:4)

மூன்று பகல் மூன்று இரவு என்பதற்கு தற்கால வழக்கில் என்ன பொருள் இருந்தபோதிலும் இந்த நிகழ்ச்சியைப் பற்றிக்

குறிப்பிடுகிற பல்வேறு வசனங்களையும் ஒப்பு நோக்கி வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில் அதற்கு என்ன பொருள் என்று அறிந்து அதை ஏற்றுக் கொள்வது விரும்பற்பாலது.

வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையில் கல்லறையினிடத்தில் வந்தார்கள் என்றும் அவர்களுக்கு "அவர் இங்கே இல்லை; அவர் உயிர்த்தெழுந்தார்.

மனுஷகுமாரன் பாவிகளான மனுஷர் கைகளில் ஒப்புக் கொடுக்கப்படவும், சிலுவையில் அறையப்படவும் மூன்றாம்நாளில் எழுந்திருக்கவும் வேண்டுமென்பதாக அவர் கலிலியோவில் இருந்த காலத்தில் உங்களுக்குச் சொன்னதை நினைவு கூறுங்கள் என்று வேதாகமம் நமக்குக் கூறுகிறது. (லூக் 24:1-8)

மூன்று பகல் மூன்று இரவு என்பதற்கும் மூன்றாம் நாள் என்பதற்கும் பெரிய வித்தியாசம் இருப்பதாக எண்ணி இயேசுவின் சீடர்கள் குழப்பமடையவில்லை.

இயேசு மரித்த பிறகு அவருடைய சரீரத்தை சிலுவையிலிருந்து இறக்கி கல்லறையில் வைத்த நாள் ஆயத்த நாளாயிருந்தது. ஓய்வு நாளும் ஆரம்பமாயிற்று என்று வேதகாமம் கூறுகிறது.

கலிலேயாவிலிருந்து அவருடனே கூட வந்திருந்த ஸ்திரீகளும் பின் சென்று கல்லறையையும் அவருடைய சரீரம் வைக்கப்பட்ட விதத்தையும் பார்த்துத் திரும்பி போய் கந்தவர்ககங்களையும் பரிமள தைலங்களையும் ஆயத்தம் பண்ணி கற்பனையின் படியே ஓய்வு நாளில் ஓய்த்திருந்தார்கள் என்று வேதாகமம் கூறுகிறது. (லூக் 23:50-56)

ஓய்வு நாள் வாரத்தின் ஏழாவது நாளில் அனுஷ்டிக்கப்பட்டது என்று அறிவோம் (யாத் 20-10) அதற்கு முந்திய ஆறாம் நாள் வரப்போகிற ஓய்வு நாளுக்கு ஆயத்தநாள் (யாத் 16:5,22-25 காண்க) மேற்குறிப்பிட்டுள்ள வசனங்களின் வெளிச்சத்தில் நாம் பார்க்கும்போது இயேசுகிறிஸ்து ஆறாம் நாளாகிய வெள்ளியன்று மரித்தார். ஏழாம் நாளாகிய சனிக்கிழமை ஓய்வு நாள் அதற்கடுத்த நாள் வாரத்தின் முதல் நாள் (ஞாயிற்றுக்கிழமை) அதாவது மூன்றாம்நாளில் தாம் முன்னுரைத்தபடியே உயிர்த்தெழுந்தார்

அவர் உயிர்த்தெழுந்த பிறகு அவருடைய சீஷர்கள் அவர் சொன்னவைகளை நினைவு கூர்ந்தனர். அவர்கள் வேதவசனங்களையும் இயேசு சொன்னவைகளையும் விசுவாசித்தனர். (யோ 2.22) நாமும் கூட அப்படியே விசுவாசிப்போமாக!

E.Z. செல்வநாயகம்

# சிறந்த முன்னோடிகள் தேவை

ஒரு குடும்பம், பள்ளி, வியாபாரம் கடை அல்லது ஒரு நாடு ஆகியவை நன்கு இயங்க வேண்டுமானால் ஒரு தலைவர் தேவை. அது போல் சபைக்கும் கூட முன்னோடிகள் தேவை. ஏராளமான மக்கள் வீதிகளிலும், தெருக்களிலும் எந்த ஒரு நோக்கமில்லாமல் சுற்றி அலைந்து திரிவர். அவர்களையெல்லாம் ஒரு அணியில் திரட்டி ஒரு கொடியின் கீழ் கொண்டு வந்து விட்டால் நல்லதுக்கும் பயன்படுவார்கள்; கெட்டதுக்கும் பயன்படுவார்கள். அது தலைமை ஏற்பவருடைய மனநிலையைப் பொருத்தது.

சபையைப் பொறுத்தவரையில் கிறிஸ்துவே தலை (கொலோ 1:18). உலகில் பல்வேறு பாகங்களில் பிராந்திய சபைகள் பரவிக் கிடக்கிறபடியால் அவைகள் ஒவ்வொன்றிற்கும் முன்னோடிகள் தேவை. பிராந்திய சபைகளிலும் கூட கிறிஸ்துவே ஆவிக்குரிய தலை. அவருடைய வார்த்தைகளடங்கிய வேதாகமத்தின் மூலமாக அவருடைய சித்தத்தை நிறைவேற்றவும் வழி நடத்தவும் செய்கிறார், ஆனால் அன்றாடப் பணிகளை மேற்பார்ப்பதற்கு மனித முன்னோடிகளும் தேவைப்படுகின்றனரே! அதற்கு சில மனிதர்கள் உருவாக வேண்டும். அல்லது சபை உருவாக்க வேண்டும்.

ஆதி நாட்களிலே அப்போஸ்தலருக்கு ''நீங்கள் உலகம் எங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்'' என்ற கட்டளையோடு (மாற்கு 16:15,16) குணப்பட்டவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசங்களில் உறுதியாகத் தரித்திருந்தார்கள் என்றும் பார்கிறோம். ஆயினும் அப்போஸ்தலருக்குச் சொல்லப் பட்ட அனைத்துப் பணிகளையும் அவர்களால் செய்து முடிக்க முடியவில்லை. அவர்கள் எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் இருக்க முடியவில்லை. ஆகையால் அவர்கள் தங்களுக்கு உதவியாக சில மனிதர்கள் மேல் கை வைத்து சில அற்புத அடையாளங்கள் செய்யும் வரத்தையும் பகிர்ந்தளிக்க கர்த்தர் அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். அதன் மூலமாக குழந்தைப் பருவத்தில் இருந்த சபை தேவனுடைய உண்மையான வெளிப்பாட்டின் வழியாய் வேரூன்றி தழைத்து வளர முடிந்தது.

ஊழியம் வளர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் சபைகள் நிர்மாணிக்கப்பட்ட பொழுது அவைகளைக் கண்காணிக்கவும் நடத்தவும் மூப்பர்களும் அவர்களுக்கு உதவிக் காரர்களும் தேவைப் பட்டார்கள். (1தீமோ 3 :தீத்து 1) ஒரு ஊழியரோ அல்லது

உள்ளூர் பிரமுகர் ஒருவரோ சர்வாதிகாரி போல் நடந்து கொள்ளா வண்ணம் பார்த்துக் கொள்வதற்கு ஒவ்வொரு சபையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்கள் நியமிக்கப்பட்டார்கள். அப்படிப்பட்ட தகுதி வாய்ந்த மூப்பர்களும், உதவிக்காரர்களும் உருவாகும் வரை சபையின் காரியங்களை மேற்பார்ப்பதற்கும், பிரசங்கம், கர்த்தருடைய பந்தி, சபையின் பொருளாதாரக் காரியங்களை கவனிப்பதற்கும் சிலரை நியமிக்க வேண்டியதாயிருந்தது.

ஆரம்ப நாட்களில் அப்போஸ்தலர்கள் சில குறிப்பிட்ட மனிதர்களின் மேல் கை வைத்ததால் சிலர் அற்புத அடையாளங்களைச் செய்யும் ஆற்றல் பெற்று அவர்கள் சபையின் முன்னோடிகளாகத் திகழ்ந்தார்கள். அவர்கள் அநேகமாக மூப்பர்களுடைய ஸ்தானத்தில் பணியாற்றினார்கள். இவ்விதமான பரிசுத்த ஆவியின் சிறப்பு வரங்களின் மூலமாக அவர்களுடைய வேத அறிவு, ஞானம், விசுவாசம் முன் மாதிரியான வாழ்க்கை என்று பல் வகையிலும் அவர்கள் சிறந்து விளங்கினார்கள். இவைகள் எல்லாம் இருந்தாலும் அவர்கள் ஒரே மனைவியையுடையவர்களாகவும் விசுவாசிக்கிற பிள்ளைகள் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்ற நியதியையும் பின்பற்றினார்கள். பரிசுத்த ஆவியின் அனுக்கிரகம் அவர்களுக்குத் துணை நின்றதால் குறுகிய காலத்தில் அவர்கள் மூப்பர்களுடைய தகுதியடைந்தார்கள். சபையும் பலுகிப் பெருகிற்று.

அன்றைக்கு அப்போஸ்தலராக அழைக்கப்பட்டவர்கள் யாரும் இன்றைக்கு நம்மிடையே உயிரோடில்லை. பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குப் பெற்றவர்களோ, அப்போஸ்தலர்கள் கை வைத்ததினால் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றவர்களோ இடையாது. ஆகையால் மூப்பர்களுக்குரிய தகுதிகளை விரைந்து பெற்றுக் கொள்வதற்குரிய வாய்ப்புகள் குறைவு. மூப்பர்களுக்குள்ள தகுதிகளைப்பெற்றுக் கொள்வதற்கு காலமும், பயிற்சியும் தேவைப்படுகிறது.

மூப்பர்களைக் கொண்ட சபைகள் இருப்பது விரும்பத் தக்கது. ஏனெனில் வேதாகமம் ஒரு சபை பூரணமடைவதற்கு மூப்பர்களும் உதவிக்காரர்களும் தேவை என்று குறிப்பிடுகிறது. தகுதியில்லாத மக்களை பேருக்காக மூப்பர்களாக ஏற்படுத்தி விடக்கூடாது. அதற்குரிய உண்மையான தகுதிகளையுடையவர்கள் இரண்டு மூன்று பேராவது உருவாகும் வரை சபைக் காரியங்களைக் கவனிப்பதற்கு மாற்று ஏற்பாடுகள் செய்வது நல்லது. ஏனெனில் பரிசுத்த ஆவியானவர் மூப்பர்களுக்கு இன்னின்ன தகுதிகள் வேண்டும் என்று குறித்திருப்பது விளையாட்டுக்கல்ல.

அதற்கு ஒரு பெரிய நோக்கம் உண்டு. ஆகவே மாற்று ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும் என்பதை நிரந்தரமாக்கி விடாமல் விரைவில் அத்தகைய தகுதிகளை வளர்த்துக் கொள்வதற்கு ஒவ்வொரு அங்கத்தினரும் முயல வேண்டும்.

1 தீமோ 3ம் அதிகாரத்திலும் தீத்து 1-ம் அதிகாரத்திலும் சொல்லப்பட்டிருக்கிற தகுதிகளில் பெரும்பாலானவைகளை (ஒரே மனைவியையுடைய கணவன் விசுவாசமுள்ள குழந்தைகள், போதிக்கும் ஆர்வம் நூதன சீஷனாயிராமை நீங்கலாக) அடைய ஒவ்வொரு கிறிஸ்தவனும் (ஆண்களும், பெண்களும்) முயல வேண்டும். காலம் செல்லச் செல்ல இதர தகுதிகளையும் அடைய முடியும். பெண்களும் கூட ஒரே மனைவியையுடைய கணவன் என்ற காரியம், ஆண்களும் அடங்கியுள்ள கூட்டத்தில் பிரசங்கித்தல் ஆகியவை தவிர மற்ற காரியங்களில் தேர்ச்சி பெறலாமே! வேத வசனங்களில் தேர்ச்சியடைந்துள்ள பெண்கள் சகோதரிகள் மற்றும் சிறு பிள்ளைகள் அடங்கிய கூட்டத்தில் போதிக்கலாம்.

மூப்பர்களாகும் தகுதியை பெண்களுக்கு வேதாகமம்விலக்கிவைத்திருக்கிற காரணத்தை அறிய உங்களுக்கு ஒருவேளை ஆவல்இருக்கும் பெண்கள் விஷயத்தில்பாரபட்சம் காட்டுகிறார்என்று சொல்லலாமா? அல்லது பெண்கள் ஆண்களைப் போல முக்கியமானவர்கள் அல்ல என்பதாலா? அப்படியெல்லாம் நினைத்துக் கொண்டு தேவனுடைய திட்டத்தை தவறாக அர்த்தம் கொள்ளக் கூடாது. வேதாகமத்தை ஊன்றிக் கவனித்துப் பார்த்தால் ஆண்களுக்கும் பெண்களுக்கும், வித்தியாசமான பணிகளை ஒதுக்கியிருக்கிறார் என்பது தெரிய வரும். அப்படி அவர் வரையறுத்து வைத்திருப்பதற்கு ஒரு நோக்கம் உண்டு. நாம் எல்லோரும் ஒன்றை நினைவில் கொள்ள வேண்டும். கர்த்தர் சர்வ ஞானமுள்ளவர். அவருடைய காரியங்களைச் சந்தேகிப்பதோ கேள்வி கேட்பதோ தகாது. நாம் செய்ய வேண்டியதெல்லாம் நமக்கு ஒப்புவிக்கப்பட்ட பணிகளைச் செவ்வையாய் செய்வது தான். அவ்வாறு நாம் நம்முடைய கடமைகளை நிறைவேற்றும்போது அவருடைய சித்தம் நிறைவேறும். நாம் ஒவ்வொருவரும் நமக்கேற்ற ஆசீர்வாதங்களைப் பெறுவோம்.

பிராந்திய சபையில் உள்ள ஆண் அங்கத்தினர்கள்எல்லாருமே மூப்பர்களாகும் தகுதியை அடைய முயல வேண்டும். என்று பவுல் அறிவுறுத்துகிறார். நீங்கள் அப்படி செய்வது ஒரு நல்ல வேலையை விரும்புவதாகப் பொருள். நீங்கள் அப்படிப்பட்ட நல்ல வேலையை விரும்பாமற் போனால் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள ஒரு நாளும் சம்மதிக்கக் கூடாது. ஏனெனில் உண்மையாகவே அது ஒரு

பெரிய வேலை; மகத்தான பொறுப்புள்ளது. மனிதனால் மெச்சிக் கொள்ளப்படுவதற்கு யாரும் மூப்பராகக் கூடாது. ஆனால் அந்தப் பணிக்கு வர விரும்புகிறவர்கள் சபையின் உயர்வுக்காகப் பாடுபட வேண்டும், சேவை செய்ய வேண்டும். தன்னுடைய நேரத்தை சபை வேலைக்கு அர்ப்பணிக்க வேண்டும், மற்றவர்களை நேசிக்கவேண்டும், மக்களோடு இணைந்து பாடுபட வேண்டும். ஆன்மாக்களை நேசிக்க வேண்டும், அவர்களுடைய இரட்சிப்புக்காகப் பாடுபட வேண்டும்.

மூப்பர்கள் பிராந்திய சபைக்கு முன்னோடியாகக் இருக்க வேண்டும். அவர்கள் மந்தைகளைக் கண்காணிக்க வேண்டும். உறுப்பினர்களை ஆவியில் வளர உணவூட்டவேண்டும். அவர்களுக்கு முன் மாதிரியாக இருக்க வேண்டும். அவர்களை நல்வழிப்படுத்த வேண்டும். பலவீனர்களைத் தாங்க வேண்டும். சத்தியம் போதிக்கப் பட வேண்டும். கள்ள போதங்களைத் தோலுரித்துத் காட்ட வேண்டும். தேவன் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட வேலையை செய்ய வேண்டும். இம்மாதிரியான தலைமையினால் சபை வலுவடையும் வளர்ச்சி அடையும், முன்னேறும்.

ஒவ்வொரு பிராந்திய சபையிலும் மூப்பர்கள் இருப்பது நல்லது. இம்மாதிரியான தலைமைத்துவத்தை உருவாக்குவதற்கு உலகெங்கிலும் பயிற்சிகள் தரப்பட வேண்டும். இது தான் இங்கேயும் சரி வேறெங்கிலும் சரி சபை வளர்ச்சிக்கு தேவனுடைய ஆலோசனை. இந்தத் திட்டம் நல்ல முறையில் செயல் படுத்தப்பட்டால் மனித ஞானத்தால் உருவாக்கப்பட்ட எந்த முறையைக் காட்டிலும் சிறந்த பலன் கிடைக்கும். கிறிஸ்துவின் சபை ஓங்கி வளரும்.

**J. C. சோப்**

# கேடு சூழ்ந்த குடும்பம்

சமுதாயம் என்னும் மாளிகைக்கு குடும்பமே அஸ்திபாரம். அவைகள் கூட்டமாக சமுதாயத்துக்கு வலு சேர்க்கிறது. ஆனால் எல்லாக்குடும்பங்களுமே சமுதாயத்துக்குப் பெருமை சேர்க்கும் வகையில் அமைந்து விடுவதில்லை. சில குடும்பங்கள் தங்களுக்கும் தங்களைச் சுற்றியுள்வளகளுக்குமே அவமானத்தைத் தேடித் தந்து சமுதாயத்துக்குக் கேடு விளைவிக்கிறது. இப்படிப்பட்ட ஒருகுடும்பத்தின் அவல நிலையை மாற்கு தம் நூலில், படம் பிடித்துக் காட்டுகிறார். தயவுசெய்து மாற்கு 6:17-28 வரையுள்ள வசனப்பகுயை வாசித்து தியானியுங்கள்;

இங்கே குறிக்கப்பட்டிருக்கிற ஏரோது, ''ஏரோது அந்திப்பா என்பவன் ஆகும். இவன், ரோமர் காலத்தில் எப்படியோ ஆட்சியைப் பிடித்து தக்க வைத்துக் கொண்ட பெரிய ஏரோது என்று வர்ணிக்கபபடும் இதுமேயா நாட்டவனின் மகன்களில் ஒருவன். இந்த கொலைகாரக்குடும்பம் கொன்று குவிதத உயிர்களுக்குக் கணக்கேயில்லை. இந்தப் பெரிய ஏரோது என்னும் கொடியவன் தன் சொந்த மனைவி, இரண்டு மகன்கள் ஆகியோருடைய இரத்தத்தைக் குடித்தவன். இயேசுவைக் கொலை செய்யும் முயற்சியில் பெத்லேகேமில் இருந்த இரண்டு வயதுக்குட்பட்ட ஆண்குழந்தைகளையெல்லாம் கொள்ளும்படி உத்தரவு பிறப்பித்தவன் இந்த சண்டாளன்தான் (மத் 2:16). இந்த கொடியவனின் வாரிசாகிய அந்திப்பா தன்னுடைய சகோதரனாகிய பிலிப்புவின் மனைவி ஏரோதியாளை அபகரித்துத் தன் மனைவியாக்கிக் கொண்டான், பிலிப்பு மூலமாக இவளுக்கு ஒரு பெண் குழந்தை உண்டு. அதன் பெயர் சலோமி என்று வரலாறு குறிப்பிடுகிறது. ஒழுக்க கேட்-டால் உதயமான இந்தக் குடும்பத்தைக் பற்றிவேதாகமம் கூறுவதை கவனிப்போம்.

1. **இது ஒரு சட்ட விரோதமான திருமணம் :** *(வ 17,18)* பழைய ஏற்பாட்டு பிரமானத்தின் படி இது ஒரு அசுத்தமான உறவு. லேவி 20:21. புதிய ஏற்பாடு இதை விபசாரம் என்று கூறுகிறது. (ரோமர் 7:3). ஆகவே யோவான் ஸ்நானகன் கர்த்தருடைய ஊழியக்காரன் என்ற முறையில் அது சட்ட விரோதமானது என்று சுட்டிக் காட்டினார். (மத் 14:4) ஒரு நாட்டை ஆளும் அரசன் நியாயப்பிரமாணத்துக்கு விரோதமாகச் செயல் செய்யப்பட்டால் அவன் நீதிபரிபாலனம் செய்வது எப்படி? இன்றைக்கு சமுதாயமும் நாமும் சீரழிந்து போய்க் கொண்டிருப்பதற்குத் தலைவர்களும், அரசோச்சுபவர்களும் செய்கிற முறைகேடுகளே காரணம். அதனால் மக்கள் ஒழுக்க நெறிகளுக்குப் பெரிய முக்கியத்துவம் கொடுப்பதில்லை. கற்பு நெறி என்பது பழங்கதையாகி விட்டது. அவர் மற்றவர்களை விட என் உணர்வுகளைச் சிறந்த முறையில் புரிந்து கொள்கிறார், என் முதல் திருமணம் தவறுதலாக நடைபெற்று விட்டது என்பதை இப்பொழுது தான் புரிந்து கொண்டேன். மகிழ்ச்சி தரும் வகையில் வாழ எங்களுக்கும் உரிமை உண்டு என்றெல்லாம் சமாதானம் கூறி தங்கள் ஒழுக்கக் கேடுகளுக்கு நியாயம் கற்பிக்கின்றனர். இப்படிப் பெரும்பான்மையோர் நடந்து கொண்டாலும் தேவனுடைய நீதி வளைந்து கொடுக்காது.

2. **வக்கிரப்புத்தியுடையவர் :** *(வ. 19.20)* சில பேரிடம் அவர்கள் செய்வது தவறு என்று சுட்டிக் காட்டினால் மனம்

வருந்தி திருந்தி நடக்க முயற்சி செய்வார்கள் மற்ற சிலரோ மூர்க்க வெறி கொண்டு புத்தி சொன்னவர்களின் மீது சீறிப் பாய்வார்கள். தாவீது அரசனைப் பற்றி நாம் அறிவோம். அவர் உரியாவின் மனைவி பதசேபாளிடம் முறை கேடாக நடந்து கொண்டதை நாத்தான் தீர்கதரிசி கண்டித்தார். அவர் துக்கப்பட்டு தன் தவறுக்காக எவ்வளவு வருந்தினார் என்பதை சங்கீதம் 51ஐ வாசித்து அறிந்து கொள்ளுங்கள் ஏரோதியாளோ இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவள். தன்னுடைய வாழ்க்கையை விமர்சிக்கிற யோவான் ஸ்நானகனை ஒழித்துக் கட்டத் துடிக்கிறாள். ஏரோது அவளுக்கு இடங்கொடுக்கவில்லை. ஏனெனில் ஸ்நானகனுடைய பரிசுத்தத்தையும், நீதியையும் குறித்து அவனுக்கு பயம் உண்டு (வ 20)

யோவான் ஸ்நானகன் ஏரோதியாளுக்கு ஒரு அநியாயமும் செய்யவில்லை. நியாயத்தைத்தான் எடுத்துச் சொன்னார். அவளுடைய உள்ளத்திலும், இல்லத்திலும் தேவனுடைய ஆலோசனைகளுக்கும், நீதிக்கும் கொஞ்சம் கூட இடம் கிடையாது. ஆகையால் அவள் எரிச்சல் அடைந்தாள். ஆம், சகோதரர்களே, இன்றைக்கு அநேகருடைய மனப்போக்கு இதுதான் கர்த்தருடைய ஆலோசனைகளுக்கும், கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்து நடப்பது அவசியம் என்ற உணர்வு மங்கி மறைந்து கொண்டிருக்கிறது. அதனால் அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தை விட தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதனைகளைப் போதிக்கும் கள்ள போதருடைய கட்டுக்கதைகளுக்கு செவி மடுத்து அழிந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்; உண்மைக்கு எதிர்த்து நிற்கிறார்கள்.

அநேக குடும்பங்களில் சத்திய வேதத்தை விட ஆபாச நூல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. உலக உல்லாசத்துக்கு முதலிடம், ஆண்டவருடைய அருளுரைகளுக்கு அலட்சியம் நல்லொழுக்கப் பயிற்சிகளைவிட நடனக் கலைக்கு முக்கியத்துவம் பாவத்தைக் கண்டித்து உணர்த்தும் ஊழியர்கள் பரிகாசத்துக்குள்ளாகிறார்கள், கண்டனத்துக்குள்ளாகிறார்கள். அப்படிப்பட்டவர்களை ஓரம் கட்டி ஒழித்துக் கட்ட ஒன்றுபடுகிறார்கள். இத்தகைய இழிந்த வாழ்க்கை நெறிகளின் மீது நாட்டம் கொள்ளும் எந்த சமுதாயமும், எந்த நாடும் உருப்படும் என்று எதிர்பார்ப்பது எப்படி?

**உ. சிற்றின்ப கேளிக்கைகளில் ஈடுபாடு : (வ 21, 22)**

இந்த ஏரோதுவின் பிறந்த நாள் உலக வரலாற்றிலேயே மிகவும் பயங்கரமான விளைவுகளை உண்டாக்கிய விழா என்று சொன்னால் மிகையாகாது. அப்போஸ்தலன் பேதுரு கோடிட்டுக் காட்டியுள்ள சகல தீய காரியங்களும், காம விகாரம், துர்இச்சை, மதுபான வெறி களியாட்டு என்ற அனைத்தும் அங்கே இடம் பெற்

றிருந்தன (1 பேது 4:3). இதை துன்மார்க்க உளையென்றும்; இதிலே சிக்கிக் கொள்ள விரும்பாத கிறிஸ்தவர்களை உலகம் ஏளனம் செய்யும் என்றும் எச்சரிக்கிறார். (1 பேது 4:4).

ஏரோதியாளின் மகள் (சலோமி) ஆடிய நடனத்தால் இரண்டு பெரும் புள்ளிகள் தங்கள் தலைகளை இழந்தனர். முதலாவது ஏரோது மன்னனின் தலை. அதாவது சிற்றின்ப கேளிக்கையும், மதுவும் தந்த மயக்கத்தால் புத்தியையும் நிதானத்தையும் இழந்தான். அதன் விளைவு தான் மதித்து நேசித்த யோவான் ஸ்நானகனுடைய தலையைக் கொய்து கொண்டு வர உத்தரவு பிறப்பித்தான். ஆம் நண்பர்களே, சிற்றின்பக் களியாட்டுகளும் மதுவும் எத்தகைய தீமையான கேடுகளைக் கொண்டு வரும் என்பதைப் பாருங்கள். சலோமியின் அன்பும் பண்பும் அல்ல அவள் ஆட்டமும் அங்க அசைவுகளுமே அவனை மதியிழக்கச் செய்தன. அந்த நடனத்தை ரசித்து மகிழ்ந்த அத்துணை ஆண்களும் அவனைப் போலவும் அவனை விட அதிகமாகவும் நிதானமிழந்து காமம் தலைக்கேறிய நிலையில் தவித்திருப்பார்கள் என்பதற்குச் சந்தேகம் உண்டா?

எத்தனை கிறிஸ்தவக் குடும்பங்களில் இவ்விதமான ஆட்டங்களும் கூத்துகளும் வரவேற்கப்படுகின்றன. எத்தனைப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கும் இவைகளை கற்றுத்தர வேண்டும் என்றுவிரும்பி உற்சாகப்படுத்திப் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர்! பெற்றோர்களே, அவர்கள் உங்களுக்கு மகளாக சிறுமியாக இருக்கலாம். மற்ற ஆண்களுக்கு ....? வேண்டாம், இந்த விஷ விளையாட்டு புத்தியைத் தடுமாறச் செய்யும் வழியை அசட்டை செய்ய இடம் கொடுக்காதிருப்போமாக! ''**உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள் ஒருவன் உலகத்தில் அன்பு கூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை**'' என்று யோவான் எச்சரித்திருப்பதைச் சிந்தித்துப் பாருங்கள் (யோவான் 2:15) சின்னப்பிள்ளை தானே என்று நீங்கள் நினைக்கலாம் அப்பிஞ்சு உள்ளங்களில் நீங்கள் விதைக்கிற விஷ விதை வளர்ந்து மரமாகி நிற்கும்போது நீங்கள் கதறி அழுவீர்கள் ஐயோ, என் மகன் இப்படித் தகாத வழியில் சென்று கொண்டிருக்கிறானே, ஐயோ, என் அருமை மகளுடைய போக்கு என் குடும்ப கௌரவத்தை நாற்றமெடுக்கச் செய்து விட்டதே என்று புலம்புவீர்கள். அது காலம் கடந்த கதறல்—பயன் தராது, ஆகவே பெற்றோர்களே, உஷார்

**4. ஒரு நீதிமான் தலையை விலை பேசிய பரிசு (வ. 22 23)**

இப்படி ஒரு கொலை பாதக ஆசையை நிறைவேற்றும்படி

அவள் கேட்பாள் என்று ஏரோது நினைக்கவேயில்லை. அவன் திகிலடைந்தான். ஆனாலும் முடியாது எனறு சொல்ல இயலாத சூழ்நிலை. கௌரவப் பிரச்னை. அவள் வேண்டுகோளை நிறைவேற்றுவதைத் தவிர வேறுவழியில்லை. சகோதரிகளே, அவசரப்பட்டு, சிந்திக்காமல் வாக்குறுதிகளை அள்ளி வீசுவது எவ்வளவு 'ஆபத்தானது' என்பதைப்பாருங்கள் ஏரோது மன்னனின் சிந்தனையில்லாத வாக்குறுதியில் ஒரு நீதிமானின் தலை கொய்யப்பட்டது எவ்வளவு கொடுமை! குழந்தைகளை நேசிப்பது, அவர்களுடைய நியாயமான தேவைகளை நிறைவேற்றுவது என்பதும், அவர்கள் கேட்டதையெல்லாம் கொடுத்து கெடுப்பதும் இரண்டு வித்தியாசமான காரியங்கள்.

## தூய்மையற்ற பிணைப்பு :

பெற்றோர் — பிள்ளைகள் உறவு மிகவும் நேர்த்தியான அனுபவம். தாயும்—பிள்ளையும் ஒத்த குணமுடையவர்களாய் இருப்பது சிறந்தது. தங்கள் எண்ணங்களையும் அபிலாஷைகளையும் பகிர்ந்து கொண்டு மகிழ்ச்சியாகவும் அந்நியோந்நியமாகவும் இருப்பது நியாயம். பெற்றோர்களும், பிள்ளைகளும் (அது ஆண்மக்களாயிருந்தாலும், பெண்மக்களாக இருந்தாலும்) நெருக்கமாக இருக்க வேண்டும். ஆனால் துர்க்குணத்தில் அல்ல. இங்கே ஏரோதியாளும் அவள் மகள் சலோமியும் கொண்டிருந்த நெருக்கம் விஷத் தன்மையுடையது அது ஒரு பெரிய சதித் திட்டத்தை நிறைவேற்றத் துணைபோன கூட்டு முயற்சி.

ஏரோதியாளின் துன்மார்க்க காரியங்களைக் கண்டித்து உணர்த்த முயன்ற ஓர் சான்றோனின் மேல் அவளுக்கு ஏற்பட்டிருந்த குரோத மனப்பான்மையை தீர்த்துக் கொள்ள மகளைப் பயன்படுத்திக் கொண்டாள். இது சற்றும் எதிர்பாராமல் நடந்து விட்ட பயங்கரம். அநேக பெற்றோர்கள் தங்கள் தீய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தங்களின் பிள்ளைகளின் செல்வாக்குகளையும், பதவிகளையும் பயன்படுத்தி அவர்கள் ஆன்மாவை கஷ்டப்படுத்தி விடுகிறார்கள். என்ன, கொடுமை! தாங்கள் செல்வந்தர்கள் ஆகவேண்டும், ''பிரபல்யம் அடைய வேண்டும் என்ற ஆசையில் பிள்ளைகளை நடனப்பயிற்சிக்கும், மற்றும் காமக் களியாட்டுகளைக் கற்றுக் கொள்ளவும் உற்சாகப் படுத்தும் பெற்றோர்கள் அவர்களுடைய வாழ்க்கையை எவ்வாறு பாழ்படுத்தி அவர்களை அழிவான பாதையில் இட்டுச் செல்லுகின்றனர் என்று ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்''.

**ஒரு துயரம் தோய்ந்த வாக்குறுதி நிறைவேற்றம் (வ.26-28**

தான் மதித்து நேசிக்கிற ஒரு தேவ மனுஷனுடைய ஒரு, நீதிமானுடைய தலையை வெட்டி அதை ஒரு தட்டில் வைத்துத் தர வேண்டும் என்ற அந்தப் பெண்ணின் கொடிய வேண்டுகோளை ஏரோது மன்னன் கேட்டபோது அவன் துடிதுடித்துப் போயிருப்பான்! பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஒரு வாக்குறுதியைக் கொடுத்திருந்து, அந்த வாக்குறுதி நிறைவேறாததால் நன்மையைவிட தீமையே உண்டாகும் என்று தெரிந்தால் அந்த வாக்குறுதியை நிறைவேற்றாமல் தவிர்ப்பது விவேகமே — தவறல்ல. ஆனால் ஏரோது மன்னன் தன் வாக்குறுதியிலிருந்து பின் வாங்க முடியாதபடி அவன் வறட்டுக் கௌரவம் குறுக்கிட்டது ''கூடப் பந்தியிலிருந்தவர்களினிமித்தம் (வ 26) அவன் விரும்பாத ஒரு ஆணையை நிறைவேற்ற உத்தரவிட்டான்.

பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் வாக்குக் கொடுக்கும்போது விழிப்போடு இருங்கள். அதையும் மீறி ஒரு சூழ்நிலையில் நீங்கள் கொடுத்த வாக்குறுதி எதிர்பார்த்ததற்கு விரோதமான விளைவுகளைக் கொண்டு வருகிறது என்று தெரிய வந்தால் அதை நிறைவேற்றுவதை தவிர்க்கலாம், குற்றமில்லை. பிள்ளைகள், அதை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தலாம். வாக்குறுதி கொடுத்துவிட்டு இப்பொழுது தயங்குகிறீர்களே, இது நியாயமல்ல என்று வாதாடலாம் ஒரு பயங்கரமான விளைவுகளைச் சந்திப்பதை விட வாக்குத்தவறுவது அப்படியொன்றும் மோசமில்லை.

**முடிவுரை** தேவபயமற்ற ஏரோதின் குடும்ப வரலாற்றை உற்றுக் கவனிப்பீர்களானால், யோவான் ஸ்நானகனின் சிரச்சேதத்துக்குப் பிறகு ஏரோது மன்னனின் எஞ்சிய வாழ்க்கை நிம்மதியற்றதும், சமாதானம் குறைந்தும் பயம் சூழ்ந்ததுமாக இருந்ததைக் கவனிக்கலாம். இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தின் பிரபல்யத்தை ஏரோது கேள்விப்பட்ட பொழுது ''யோவான் ஸ்நானகன் மரித்தோரிலிருந்து எழுந்து வந்து விட்டான் என்று கூறுகிறான் (மாற்கு 6:16) ஏரோது குடும்பத்தில் நடந்த பயங்கரங்களே தேவபயமற்ற எல்லாக் குடும்பங்களிலும் நடைபெறும் என்று நாம் செல்லவில்லை. ஆனால் ஒன்று நிச்சயம் பாவத்தில் வாழ்கிற பாவத்தைக் கண்டு அஞ்சாத வாழ்க்கையை மேற்கொள்ளும் எவரும் சாபத்துக்குத் தப்பித்துக் கொள்ளவே முடியாது. ஆகவே தேவனுக்குப்பயந்து கிறிஸ்துவை மையமாகக் கொண்டு வாழும் வாழ்க்கையை மேற்கொள்ள நாடுங்கள்.

**E.Z செல்வநாயகம்**

# கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வது எப்படி?

மெய்க் கிறிஸ்தவத்தையும் அதன் உயர் நெறிகளையும் ஏற்றுக் கொண்டு மனந்திரும்புவனை உண்மைக் கிறிஸ்தவன் என்று கொள்ளலாம். வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று விசுவாசம், பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, பாவ மன்னிப்பை பெறுவது, திருமுழுக்குப் பெறுதல் போன்ற சகல காரியங்களையும் முறையே கடை பிடிக்கும் போது ஒருவன் மெய்யாகவே மனந்திரும்பி கிறிஸ்தவனாகிறான். (யோ 3:16, மத் 10:32-33, லூக் 13:3, மாற்கு 16:16, அப் 2:36-38) ஒருவன் மனந்திரும்பி கிறிஸ்தவனாக மாறாத பட்சத்தில் அவன் கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடியாது. உதாரணமாக, திருமணம் செய்யாத ஒரு மனிதன் திருமண வாழ்க்கை வாழ முடியுமா?

ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கை பிறருக்கு முன் மாதிரி-யாக அமைந்திருத்தல் வேண்டும். (தீத்து 2:11-12) கிறிஸ்துவின் ஊழியத்தில் ஒருவனுடைய சரீரத்தை முற்றிலுமாக ஒப்புக் கொடுக்க வேண்டும். (ரோமர் 12:1-3) ஒவ்வொரு கிறிஸ்தவனும் திக்கற்றவர்களுக்கு உதவவேண்டும். (யாக் 1:27) வாய் வார்த்தை யாலன்றி தனது செயலாலும் உண்மையாகவும் பிறரை நேசிக்க வேண்டும். (1 யோவான் 3:17-18) மாயக்காரனாக வாழ்வதும் சகல விதமான ஏமாற்று வேலைகளும் வல்லமை மிக்க தேவனால் புறக்கணிக்கப்பட்ட அவலங்கள்.

## மெய்க்கிறிஸ்தவ வாழ்க்கை என்பது என்ன?

1. ஒரு ஒழுங்கான அடக்கமான வாழ்க்கையைக் கிறிஸ்தவன் அமைத்துக் கொள்ள வேண்டும் மற்றவர்களை நியாயம் தீர்க்கும் மனப்பான்மை கூடாது. (மத் 7:1-15) எல்லா மனிதர்களும் குறையுள்ளவர்கள் என்பது உண்மையே; ஆனால் நீங்களும் அதற்கு விதிவிலக்கு அல்லவே! ஒரு மனிதனுடைய நற்குணங்-களைக் காண ஏன் மறுக்கிறாய்? ஏற்கனவே வாழ்க்கை இருள் நிறைந்ததாகத்தான் இருக்கிறது. வானத்தை அண்ணார்ந்து பார்த்தால் பிரகாசிக்கும் நட்சத்திரங்களைக் காணலாம். பூமியை நோக்கினால் சேற்றையும் காணலாம். இவற்றை பாரபட்சமின்றி பார்க்கும் மனநிலைப்பெற்றால், பிறரில் அன்பு செலுத்தும் குணத்தைப் பெற முடியும். பரிவும் பாசமும் உள்ள வார்த்தை-கள் நண்பர்கள் பலரை சம்பாதித்துத் தரும். உன் நண்கர்களிடம் காணும் குறைகளை குழி தோண்டி புதைத்துப் போடு.

## 2. தவிர்க்கப்பட வேண்டிய காரியங்கள்

பாவத்தில் மூழ்கி இருப்பவன் எவனும் கிறிஸ்தவனாக வாழ்வதில்லை. (கலா 5:19-21) உலக வாழ்வுக்கேற்ற வசதிகள் பல படைத்த ஒரு வாலிபன் இயேசுவை அணுகி அவரை நோக்கி "நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்க்கு நான் எந்த நன்மையைச் செய்ய வேண்டும்?" என்று கேட்டான்.

இயேசு அவனுக்கு என்ன பதிலளித்தார்? "நீ ஜீவனில் பிரவேசிக்-விரும்பினால் கற்பனைகளைக் கைக் கொள்.. கொலை செய்யா-திருப்பாயாக; உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணு வாயாக; உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போல பிறனிடத்தில் அன்பு கூறுவாயாக "(மத் 19: -16-22) இதுவே இயேசுவின் பதிலாக இருந்தது. இயேசுவின் மேற்கண்ட ஆலோசனைகளைஇன்று எல்லா மக்களும் கடைபிடிப்பதாக இருந்தால், உலகம் எவ்வளவு அமைதியாகவும் மகிழ்ச்சி நிறைந்ததாகவும் இருக்கும் என்பதை ஒரு நிமிடம் சிந்தித்துப் பாருங்கள். (நீதி 14:- 34)

3) **"நீங்கள் எதைச் செய்ய வேண்டும்?" என்றும் சில கட்டளைகள் நமக்குத் தரப்பட்டுள்ளன.**

"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்-கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லு-கிறவன் அதில் பிரவேசிப்பதில்லை." என இயேசு கூறியிருக்-கிறரே? (மத் 7: 21) அப்போஸ்தலன் யோவான் கூறுவதையும் கேளுங்கள். "ஜீவ விருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவர்களா-வதற்கும், வாசல்கள் வழியாக நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கிய-வான்கள். (வெளி 22: 14)

தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து அவரில் விசு-வாசம் வைத்து நமது பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, தேவனின் குமாரனாகிய இயேசுவை மனிதர்களுக்கு முன்பாக அறிக்கையிட்டு, அவருடைய நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்று பாவங்கள் கழுவப்பட்ட நிலையில் புது மனிதனாக மாறுகிறோம். (யோ 3: 16; அப் 17:30-31 8:37, 2:36-38; 22:16, ரோமர் 6: 3 4)

மேற் சொன்ன அடிப்படைக் கட்டளைகளைத் தொடர்ந்து தேவனுடைய பிள்ளைகளுக்குத் தரப்பட்ட மற்றும் பல கட்டளை-களுக்கும் கீழ்ப்படிய வேண்டும். அவை யாவை? வாரத்தின் முதலாம் நாளிலே அவருடைய பிள்ளைகள் கூடி வந்து, (அப் 20 : 7)

கொரி 16 : 1-2, எபி 10 : 25) அவர் குறிப்பிட்ட பிரகாரம் அவரை தொழுது கொண்டு (அப் 2 : 42) (எபே 2 : 19) நமக்காக மரித்த அவரை உண்மையோடும், ஆவியோடும் பின்பற்ற வேண்டும். (யோ 4 : 23-24)

இயேசு தனது சொந்த இரத்தத்தை சிந்தி சம்பாதித்த சபையின் ஒழுங்கு முறைகள், ஒற்றுமை, சமதானம் யாவும் அவருடைய விருப்பப்படியே அமைய வேண்டியது அவசியமல்லவா? (எபே 5 : 22-24) நீங்கள் ஒரு முன் மாதிரியான கிறிஸ்தவனாக வாழ தீர்மானித்துக் கொள்ளுங்கள். (1 தீமோ 4 : 12). பிரிவினை வாதிகளின் நற்சாட்சிப் பத்திரங்களுக்காக நீங்கள் பிரியப்பட வேண்டாம்.

தேவனுக்கு நம்பிக்கைக்குரியவனாகவும், விசுவாசமுள்ளவனாகவும் சகல காரியங்களிலும் நடந்து கொள். சில மூப்பர்களோ போதகர்களோ அல்லது கிறிஸ்தவர்களோ உங்கள் ஆதரவிற்கு அருகதையற்றவர்களாக இருக்கக்கூடும். என்றாலும், தேவனுக்காக நீங்கள் தொடர்ந்து ஊழியஞ் செய்யுங்கள். அப்போஸ்தலர்கள் நாட்களிலே பல கள்ளப் போதகர்களும், தீய குணங் கொண்ட சபையாரும் இருந்தனர். என்றாலும் தன்னுடைய கடமைகளில் இருந்து சிறிதும் தவறிப்போக அப்போஸ்தலன் பவுல் அவர்களுக்கு இடங் கொடுத்ததில்லை (1 கொரி 5 : 1-13). 2 தீமோ 4 : 10-18)

கிறிஸ்துவின் சபையிலும் பல இடங்களில் நிலையற்ற தடுமாற்றமுள்ள அங்கத்தினர்கள் உள்ளனர். ஒரு பிராந்திய சபையிலிருந்து மற்றொன்றுக்குத் தாவுதல், மீண்டும் அடுத்த ஒரு சபைக்கு தாவுதல், இப்படியாகத் தொடர்ந்து எதையோ தேடி அலைந்து கொண்டே இருக்கும் இத்தகையோர் என்றுமே திருப்தி அடைவதில்லை. மூப்பர்களுக்கும் அடங்காமல், தேவனுக்கும் ஊழியஞ் செய்யாமல், சபையில் எந்தப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளாமல் சதா பிறரைப் பழித்தும் குறைத்தும் பேசுவதையே பொழுது போக்காகக் கொள்ளும் இத்தகைய இழி குணம் படைத்தோர் இறுதியிலே வீழ்ந்து போகின்றனர். தாங்களும் கெட்டு பிறரையும் கேட்டுக்கு வழி நடத்துபவர்களாக இருக்கிறர்கள்.

இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் அவருடைய கட்டளைகளிலும் வழிகளிலும் வேரூன்றி நிலை பெற்றவர்களா இருக்க வேண்டுமென்பது அவருடைய விருப்பம். ''விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள்

அன்பிலே வேரூன்றி நிலை பெற்றவர்களாயிருக்க வேண்டுமென்றும் வேண்டிக் கொள்ளுகிறேன் (எபே 3:17) கிறிஸ்தவர்கள் ஸ்திரமாகவும் நிலைத்திருக்கவும் வேண்டும் (கொலோ 1:23) ''நீங்கள் போதிக்கப்பட்டபடியே விசுவாசத்தில் உறுதிபட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக'' (கொலோ 2:7)

பூமிக்கடியில் வேரூன்றி வளர்ந்த பின்னரே எந்த செடியும் மேல் நோக்கி வளரத் தொடங்குகிறது இயற்கையின் இந்த நியதியை நன்கு தெரிந்த ஏசாயா தீர்க்கத்தரிசிகூறுவதைக்கேளுங்கள் ''யூதா வம்சத்தாரில் தப்பி மீந்திருக்கிறவர்கள் மறுபடியும் கீழே, வேர் பற்றி மேலே கனி கொடுப்பார்கள். (ஏசாயா 37:31)

சகல காரியங்களிலும் குற்றங்கண்டுபிடிப்போரும், குறை கூறித்திரிவோரும் அழுது வடியும் அங்கத்தினர்களும் நம்மில் அதிகமாகக் காணப்படுவது ஏன்? தேவனுடைய வசனத்தில் அடிப்படைக் கொள்கைகளிலே அவர்கள் ''வேரூன்றி நிலை பெற்றவர்களா இல்லாத காரணமோ? தேவனுடைய வசனங்களுக்குக் கீழ்ப்படிந்து ஆவியில் வளர்ச்சியடைய வேண்டிய தருணம் இதுவல்லவா?

**W.A ஹோலி** **S.S ராஜன்**

# கனவுகள் அல்லது காட்சிகள் வழியாக தேவன் இன்று நம்மோடு பேசுகிறாரா?

கனவுகள் மூலமாகவும் காட்சிகள் வழியாகவும் தேவன் தங்களோடு பேசுவதாக சிலர் இன்று கூறிக்கொண்டிருக்கின்றனர். உலகின் சகல பகுதிகளிலும், குறிப்பாக நம் நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் கூட இவ்வாறு சவால் விடும் பேர்வழிகளை நாம் காணமுடிகிறது. தேவன் தங்கள் மூலமாக பல காரியங்களை வெளிப்படுத்தி வருவதாகவும், அவற்றை மக்கள் நம்பி, அச் செய்திகளின் படி நடக்க வேண்டுமென்றும், இவர்கள் நடத்திக் கொண்டிருக்கும் பத்திரிக்கைகள் மூலமாக மக்களை பயமுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இச்செயல் தொடர்ந்து நடந்து கொண்டு வருகிறது. ஏனெனில், தேவன் பெயரால் அல்லது மதத்தின் பெயரால் கூறப்படும் எந்த செய்தியையும் குருட்டுத்தனமாக அப்படியே நம்பத் தயாராகவிருக்கும் மக்கள் கூட்டம் ஒன்று எங்கும் பரவலாக இருப்பது இவர்களுக்குத் தெரியும். அதுமட்டுமல்ல இக் கூட்டம் இந்த நபர்களின் சீடர்களாக மாறி அவர்களை 'தீர்க்க

தரிசிகள்' 'எனவும், 'கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் முன்னோடிகள்' எனவும் அழைக்கத் தயங்குவதில்லை.

தேவன் தங்கள் கனவில் தோன்றி அல்லது தங்களுக்குக் காட்சியளித்து பேசுகிறார் என உரிமை கொண்டாடும் இந்நபர்கள் யார்? மிகவும் உணர்ச்சி வசப்படக்கூடிய மன நோயாளிகளே இவர்கள். கற்பனைக் கதைகளை உருவாக்கி, அவற்றை தேவன் அவர்களுக்கு வெளிப்படுத்தினதாக சரடு திரிக்கின்றனர். தேவனுடைய கட்டளைகள் என அவர்கள் கற்பனையில் உதிக்கும் சில பல விஷயங்களை ஆழ்ந்து சிந்தித்து, அவற்றை அடிக்கடி மனத்திரையிலே ஓடவிட்டுப் பார்ப்பதால், தூக்கத்திலே இவ்விஷயங்கள் மீண்டும் கனவுகளாகத் தோன்றும் சாத்தியங்கள் உண்டு. அவற்றை தேவனே அவர்களுக்கு வெளிப்படுத்தினார் என முடிவு செய்து கொள்கின்றனர்! இவர்களுடைய கற்பனைக் கதைகளை மக்களிடம் கூறி வெள்ளோட்டம் பார்க்கின்றனர். இத்தகைய கயிறு திரிப்பு வேலையில் அவர்களுக்கு சிறிது விளம்பரம் கிடைக்கத் தொடங்கியதும் மென்மேலும் இப்பணியில் ஈடுபட ஆரம்பிக்கின்றனர். ஏனெனில் இவர்களது புகழும் மதிப்பும் உயர்ந்து நிறையமககள் இவர்களைப் பின்பற்ற தொடங்குகின்றனர். இதில் வருந்தக்கூடிய விஷயம் என்னவென்றால், சமூகத்தில் ஒரு உயர்ந்த நிலையை இவர்கள் அடைந்ததும், சத்தியத்தை அறியும் சந்தர்ப்பம் கிடைத்தாலும், இவர்கள் மாறுவது மிகக் கடினம் (அப் 8;13,21) உண்மை என்னவென்றால், இவர்கள் தவறான கொள்கைகளைப் பற்றிக் கொண்டிருப்பதால், தேவன் இன்று மக்களிடம் எவ்வாறு பேசுகிறார் என்று வேதாகமம் உணர்த்துவதை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர்.

தேவன் தன்னுடைய கட்டளைகளுக்கு முரணான வேறொரு கட்டளையைக்கொடுக்கமாட்டார். ஏனெனில்அவர் முரண்பாடற்ற தேவன். எபிரேயர் 1:1,2 வசனங்களிலே நாம் படிப்பது என்ன? **''பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்''.** மலையிலே மறுரூபமானபோது, இயேசுவின் சீடர்களுக்கு மோசேயும் எலியாவும் கிறிஸ்துவுடன் பேசுகிறவர்களாகக் காணப்பட்டனர் அப்போது சீடர்கள், கிறிஸ்து, மோசே எலியா ஆகிய மூன்றுபேருக்கும் கூடாரங்களை அமைக்க விரும்பினர், எனவும் மத்தேயு 17 : 1-5 வசனங்களில் நாம் காண்கிறோம். தொடர்ந்து சடுதியில் ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள் மேல் நிழலிட்டதையும் ''இவர்

என் நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன்: இவருக்கு செவி கொடுங்கள்'' என தேவன் கூறியதையும் படிக்கிறோம். எனவே அவருடைய குமாரனுக்கு செவிகொடுக்க வேண்டும் என்பதே இன்று நமக்கு தேவனுடைய கட்டளை-யாகும். தேவனின் குமாரனாகிய இயேசு இன்று நம்மோடு எவ்வாறு பேசுகிறார்? அவருடைய புதியஏற்பாட்டின் வழியாகத் தான் நம்மிடம் பேசுகிறார். இதோ, ''கிறிஸ்துவின் உப-தேசத்தில் நிலைத்திராமல் மீறிநடக்கிற எவனும்தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்-திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடைய-வன் ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டு வராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும் அவனுக்கு வாழ்த்துதல் சொல்-லாமலும் இருங்கள்'' என 2 யோவான் 9,10 வசனங்களில் காண்கிறோம். கிறிஸ்துவின் உபதேசத்தை நாம் காணும் இடம், சந்தேகமில்லாமல், தேவனுடைய புதிய ஏற்பாட்டில்தான் கிறிஸ்துவின் உபதேசத்தின் படி நடக்கவேண்டுமானால், சுவி-சேஷத்தின் கட்டளையின்படி, புதிய ஏற்பாட்டில் காணப்படு-பவைகளுக்கு மாறாக நாம் செயல்படக்கூடாது. புதியஏற்பாட்டு உபதேசங்களை நமக்கு யார் போதித்தாலும் அவற்றை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏனெனில் அவை கிறிஸ்துவின் போதனைகளாகும், ஆனால் தேவன் தனக்கு வெளிப்படுத்திய-தாக ஒரு கதையை அல்லது செய்தியை யாராகிலும் நமக்குத் தெரிவித்தால் அதை நாம் நம்பக் கூடாது. ஏனெனில் அது கிறிஸ்துவின் உபதேசம் அல்ல; அது புதிய ஏற்பாட்டிலும் காணப் படாதது. பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு, புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் உபதேசங்களை பல புத்தகங்களாக எழுதிய அப்-போஸ்தலர் பவுல், கலாத்தியருக்கு எழுதிய நிருபத்தில் கூறுகி-றார்:''.. சிலர் உங்களை கலகப்படுத்தி, கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லா-மல் வேறல்ல. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவி-சேஷத்தையல்லாமல், நாங்களாவது வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவ-னாயிருக்கக் கடவன்'' (கலா. 1:7,8). இந்த அப்போஸ்தலர் இங்கு என்ன கூறுகிறார் என்றால், தேவனுடைய சுவிசேஷம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது; இத்துடன் புதிய சங்கதிகளை சேர்க்க ஒரு மனிதனோ, வானதூதனோ முயன்றால் அவன் சபிக்

கப்பட்டவனாக இருப்பான் என்பதாகும். கிறிஸ்துவின் உபதேசங்கள் அடங்கிய புதிய ஏற்பாட்டில் எழுதப்பட்டவைகளை யாராவது நமக்கு எடுத்துக் கூறினால், அவை மனிதனின் கற்பனைக் கதைகள் அல்ல என்பதால், அவற்றை தேவனின் வார்த்தை என நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் தேவனால் கொடுக்கப்பட்ட புதிய ஏற்பாட்டில் காணப்படாத சங்கதிகளை நம்மிடம் யார் கூறினாலும் உடனே அவற்றை நிராகரித்து விட வேண்டும் ஏனெனில் அவை கிறிஸ்துவின் உபதேசங்கள் அல்ல. காரியம் எவ்வளவு எளிதாக இருக்கிறது பாருங்கள்! குழப்பத்திற்கே இடமில்லை.

சகல அதிகாரங்களும் தேவனிடத்தில் குவிந்துகிடக்கின்றன (யோவான் 1 : 1-3: ஆதி 1 : 1) கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்த பின்னர், வானத்திலும் பூமியிலும் எல்லா அதிகாரங்களும் கிறிஸ்துவுக்கு அளிக்கப்பட்டுள்ளன. (மத். 28 : 18 - 20). எனவே, கிறிஸ்துவின் போதனைகளை மட்டுமே மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். (மத். 17 : 5; உபா 18 : 15). கிறிஸ்து தனது அப்போஸ்தலர்களுக்கு அதிகாரங்களை அளித்தார். தீர்க்கதரிசன வரத்தை பரிசுத்த ஆவியானவரிடமிருந்து பெற்றுக் கொண்ட அப்போஸ்தலர்கள் தேவனுடைய சிவிசேஷத்தை மனிதருக்கு வெளிப்படுத்தினார்கள். மனித இரட்சிப்புக்கான பணியை இவ்வுலகில் முடித்து விண்ணேறு முன்னர் இயேசு அப்போஸ்தலரிடம் கூறினார். **''நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன். என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்''** யோவான் 14:25,26: அவர் மேலும் அவர்களிடம் கூறினார். **''இன்னும் அநேக காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது: அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்க மாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும் போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்! அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப் போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்''.** (யோவான் 16 ; 12, 13) அவ்வாறே, அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்நானம் பெற்றதும், அப். 1 : 5,8 & 2 : 1, 4 வசனங்களில் நாம் காண்பது போல, கிறிஸ்து பூமியில்,

வாழ்ந்தபோது அவர்களுக்குப் போதித்த யாவற்றையும் அப்போஸ்தலர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் விளங்கப் பண்ணினார். மேலும் கிறிஸ்து வாக்களித்தபடி, அவர் கூறிய யாவற்றையும் அவர்களுக்கு பரிசுத்த ஆவியானவர் நினைவுபடுத்தி சத்தியத்திற்குள் நிலைத்திருக்க உதவினார். இப்படியாக பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப் பெற்று, புதிய ஏற்பாட்டின் ஒவ்வொரு புத்தகத்தையும் அவர்கள் எழுதி தேவனின் சுவிசேஷத்தை நமக்கு அளித்தனர். 2 பேதுரு 1 : 21 ம் வசனம் கூறுவதுபோல, ''தீர்க்க தரிசனமானது ஒரு காலத்திலும் மனிதனுடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை: தேவனுடைய பரிசுத்த மனிதர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்''. வேதாகமத்திலுள்ள 66 புத்தகங்களில், பழைய ஏற்பாட்டில் 39 புத்தகங்களும், புதிய ஏற்பாட்டில் 27 ம் உள்ளன. 'ஏற்பாடு' என்றால் 'உயில்' (கட்டளை) அல்லது 'உடன்படிக்கை' என்று பொருள். கிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்கு முன்பு வாழ்ந்த மக்களுக்காக ஏற்பட்டது பழைய ஏற்பாடாகும். (உபா 5 : 1 -3; எரேமியா 31 : 31 - 33; எபி. 8 :7, 13) கிறிஸ்துவின் மரணத்திற்குப் பின்னர் அமுலுக்கு வந்த சட்டங்களே தேவனின் புதிய ஏற்பாடாகும். அவர் மரணத்திற்குப்பின், தேவன் பழைய ஏற்பாட்டை நீக்கிவிட்டு, பதிலாக புதிய சட்டங்கள் அடங்கிய புதிய ஏற்பாட்டை நமக்கு சட்டமாகத் தந்தார். அவையே கிறிஸ்துவின் சிலுவை மரணந் தொட்டு உலக முடிவு மட்டும் அமுலில் இருக்கும் சட்டங்கள். (கொலே 2: 14 ; எபி 9: 11-17).

எனவே, மனிதன் தெரிந்து கொண்டு கடைபிடிக்க வேண்டிய சகல கட்டளைகளையும் வேதாகமம் என்னும் அவருடைய புத்தகத்தில் முழுமையாக நமக்கு வெளிப்படுத்தி விட்டார். அத்தோடு, அவருடைய சுவிசேஷத்தில் எதையும் சேர்க்கவோ, அதிலிருந்து எதையும் எடுத்துப் போடவோ கூடாது என மனிதனுக்கு எச்சரிக்கையும் விடுத்துள்ளார். (வெளி. 22 :18-19). **''வேதவாக்கியங்களெல்லாம்''** அதாவது வேதாகமம், **''தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனிதன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையும் செய்ய தகுதியுள்ளவனாகவும் இருக்கும் படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும், பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது''** என 2 தீமோத். 3 : 16, 17 வசனங்களில், பரிசுத்த ஆவியானவர் கூறியிருக்கிறார்.

தேவனின் ஏவுதலால் எழுதப்பட்ட சுவிசேஷம் முழுமையானதும் மனிதன் செய்ய வேண்டிய எல்லா நற்கிரியைகளுக்கும் போதுமானதாக உள்ளது என வசனம் கூறுவதைக் கவனியுங்கள். எழுதப்பட்ட தேவனின் வார்த்தையானது மனிதனை எல்லா வகையிலும் முழுமையாகவும், சகல நற்கிரியைகள் செய்யவும் தகுதியாக்கும் போது நிச்சயமாக புதிய வெளிப்பாடுகள் இனித்தேவையில்லை. (கலா. 1 : 6-9). நாம் வேதாகமத்தை —தேவனின் வார்த்தையை — படித்து அதன்படி நடக்க வேண்டும்; ஏனெனில் கிறிஸ்து கூறினார்: **''என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந் தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமும் அவனைக் கடைசி நாளில் நியாயந் தீர்க்கும்''.**

(யோவான் 12: 48) 1 யோவான் 4: 1 வசனத்தில் தேவனுடைய எச்சரிக்கையை **'' பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்''** இதைச் செய்வது எவ்வாறு? மிக எளிது வேதாகமம் அல்லாது வேறொரு ஆகமம் இல்லை என்னும் நிலையில் உறுதியாக நின்று வேதாகமம் குறிப்பாக புதிய ஏற்பட்டாகிய கிறிஸ்துவின் பிரமாணங்களை மட்டுமே ஏற்றுக் கொண்டு, மனித ஞானத்தில் உதித்த எதையும் நிராகரித்து விடுவதே ஆகும்.

**சன்னி டேவிட்**

# இறுதி தீர்ப்பில் நீங்கள் எந்த பக்கம்?

மத்தேயு 25ஆம் அதிகாரம் 31 முதல் 46 வரை உள்ள வசனங்களை கவனமாய் படித்துப்பாருங்கள். இயேசு ஒலிவ மலை மீது அமர்ந்திருந்தார். அவருடைய சீடர்கள் அவரை அணுகி உலகத்தின் முடிவுபற்றியும் கிறிஸ்துவின் இரண்டாவது வருகைப் பற்றியும் அவரிடம் கேட்டனர். கிறிஸ்து அவர்களுடைய கேள்விக்கான பதிலை விளக்கிக் கூறிவிட்டு (மத்தேயு 24, 25) கடைசியாக நியாயத் தீர்ப்பு பற்றிய காட்சியுடன் முடிக்கிறார். (மத் 25-31-44) நீதிமான்கள் வலது பக்கத்திலும் துன்மார்க்கர்கள் இடபுறமும் நிறுத்தப்படுவார்கள். அன்றைய நாளிலே நடக்கும் தீர்ப்பு சிலரை வியப்படையச் செய்யும்!

அந்த தீர்ப்பின் நாள் வருகையில், வியப்படைந்து நிற்போரில் நாமும் ஒருவராக இருப்போமா? (1 கொரி 10;12)

''வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்'' (மத் 23:34) என்ற வரவேற்பு கிடைக்குமா? அல்லது, ''சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்'' என்ற திடுக்கிடும் தீர்ப்பை அடைவோமா? (மத் 25-41)

இப்பகுதியில் நீதிமான்களுக்கு குறிப்பிடப்பட்டிருக்கும் காரியங்கள் அனைத்துமே இரக்க சிந்தை, நற்கிரியைகள் சம்பந்தப்பட்டவையாகும். ஆகவே இவற்றை கடைபிடித்து நடப்பது கிறிஸ்தவர்களின் தலையாயக் கடமை. பசித்தோருக்கு உணவு, தாகமுள்ளவர்களுக்கு தண்ணீர், அந்நியருக்கு உதவி, தேவையுள்ளவர்களுக்கு ஆடை, நோயுற்றோர், சிறைப்பட்டோருக்கு ஆறுதல் இத்தியாதி இக்கடமைகளை பலர் புறக்கணித்து வருகின்றோம். யாக் 1-27.

பாவத்தைப் பற்றி நம்மில் பலருக்குத் தெளிவில்லை. கொலை கொள்ளை, திருட்டு, விபச்சாரம், பொய் ஆகியவைகள் தான் பாவம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறோம். அப்படியல்ல; நற்செயல்களைச் செய்யத் தவறுவதும் கூட பாவம் என்று வேதாகமம் கூறுகிறது. (யாக் 4:17:1 யோ, 5:17: எபி 2:31 10,25) தேவன் வேண்டாம் என்று விலக்கினதைச் செய்வதும் பாவமே (1 யோ 3:41 கலா 5;19-2!) இவைகளைப் புரிந்து கொண்டு, கிறிஸ்தவர்கள் செயல்படத் தவறினால் பாவம் செய்கிறோம் என்றே பொருள்

இக்கடமைகளை நிறைவேற்ற நற்பண்புடன் மாயமற்ற அன்பு செலுத்துவதாகவும் கட்டாயத்தினிமித்தமாகவும் மற்றவர்கள் பாராட்ட வேண்டும் என்பதற்காகவும் இவற்றை நாம் செய்யக் கூடாது.

தேவன் பேரிலும் மனிதர் பேரிலுமுள்ள அன்பால் உந்தப்பட்டே இந்த நற்கிரியைகளைச் செய்ய வேண்டும். நம்மைப்போல நம் அயலானையும் நேசிக்க வேண்டும் என்பது கட்டளை நல்ல சமாரியனுடைய செயல் இதை நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது. (லூக்கா 10: 25-37) ''உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இதயத்தோடும் உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக'' என்பதாகும். (மத் 22;34-40) எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராது சக மனிதர்களிடம் உண்மையாக அன்பு செலுத்த வேண்டும். இவ்வுலகில் நாம் மட்டுமே தனித்து வாழவில்லை. எனவே ''மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய வேண்டுமென்று

விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள் (லூக் 6:31 ; மத் 7:12) என்ற தங்கச் சட்டத்தை நாம் ஏற்று நடக்க வேண்டும்.

சில நேரங்களில் சில மனிதர்களுடன் நாம் இணைந்து போவது எளிதாக இருக்கக்கூடும்; இன்னும் சில வேளைகளில் அது கடினமாக இருக்கலாம். ஒரு உறவினர் அல்லது நண்பரோடு ஒத்துப்போவது நமக்கு எளிதாகத் தோன்றும். நமது நண்பர்களுக்கு உணவளிக்கிறோம். அவர்களும் பதிலுக்கு நமக்குச் செய்கிறார்கள். நமது உறவினர்கள் ஒன்றாகச் சேரும் திருமணம் அல்லது பண்டிகை நாட்களில் பலத்த விருந்து செய்து மகிழ்கிறோம், வறுமையில் வாடும் ஏழைகளுக்கு நாம் உண்டு, மீதியானவைகளை அரை மன துடன் கொடுக்கிறோம். (லூக் 16: 19-31).

ஒரு ஆப்த நண்பரோ அல்லது உறவினரோ வியாதியாயிருப் பின் அவரைச் சந்தித்து ஆறுதல் கூறி தேவைப்பட்ட உதவிகளை செய்கிறோம். அன்னியர்கள் காரியங்கள் என்று வரும்போது 'போதிய நேரம் கிடைப்பதில்லை:" "அது ஒட்டுவாரொட்டி, நோய் நம்மையும் தொற்றிக் கொள்ளும்'' என்றெல்லாம் சொல் லிக்கொண்டு ஒதுங்கிக் கொள்கிறோம்.

''வறுமையில் வாடுவோருக்கு உதவியா? நாமே வறுமைக் கோட்டுக்கும் கீழ்த்தான் இருக்கிறோம். நமக்கு யார் உதவு கிறார்கள்? நமது பிரச்சனையே தலைக்கு மேல் இருக்கின்றன. ஊருக்கு உதவ முடியுமா? அது அவன் தலைவிதி'' என்று வேதாந் தம் பேசுகிறோம்.

சிறைவாசிகளைச் சந்திப்பது? ஐயோ, வேறு வினையே வேண்டாம் உனக்கும் அவனுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கும் இல்லாவிட்டால் உனக்கும் ஏன் இவ்வளவு அக்கரை? என்றுபோலீஸ் பிடித்துக்கொள்ளும் நமக்கு ஏன் வீண் வம்பு? என்று செய்கிற- வனையும் கெடுத்து விடுகிறோம்.

தேவனுடைய வசனமோ ''சகல வித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயிருக்க வேண்டும்'' என்றுரைக்கிறது. (||கொரி 2-8) எபேசி 2:10; || தெசலோ 2,27; |தீமோ. 618; தீத்து 3;8) நாம் தரும் கனிகளைக்கொண்டே நாம் அறியப்படுகிறோம்; நியாயந் தீர்க்கப்படுகிறோம். (மத், 7:16; லூக், 6:14)

பசி தாகத்தால் வாடுவோரைப்பற்றிய உண்மையான அக்- கரை கிறிஸ்தவர்களுக்கு இருக்கவேண்டும். வறுமையின் படியிலுள்ச

ளவருக்கு உதவினால் தேவனுடைய ஆசீர்வாதத்தில் நமக்கு பங்குண்டு. அந்நியர், வியாதியஸ்தர், சிறைவாசிகள் பற்றியும் அக்கரை நமக்கு வேண்டும். (எபிரேயர் 13: 1-3 பார்க்க) நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்வோம் (கலாத்தியர் 6:10)

இயேசு கிறிஸ்து அளித்த இரட்சிப்பின் மகத்தான திட்டம் (மத்தேயு 28:18-20; மாற்கு 16:15-16) எல்லா நாடுகளிலுமுள்ள சகல ஜாதிகளுக்கும்கொடுக்கப்பட்டதாகும். ஒவ்வொரு ஆன்மாவும் அவருக்கு முக்கியமானவர்களே. இச்செய்தியை உலகம் முழுமைக்கும் எடுத்துச்செல்லும் தூதர்களாக கிறிஸ்தவர்கள் செயல்பட வேண்டும். அது மட்டும் அல்ல; எல்லா ஆசிர்வாதங்களும் பொங்கி வழியும் அவருடைய நற்செய்தியை நாம் கேட்டு அதன்படி நடக்கவும் வேண்டும் (யாக் 1:22).

பசியுள்ளோரையும் வறுமையில் வாடுபவர்களையும் நாம் சந்திக்க மறுத்தால் இந்நற்செய்தியை அவர்களுக்கு எவ்வாறு கொண்டு போக முடியும்? அந்நியரை ஒதுக்கினால் எவ்வாறு அவர்களை அணுக முடியும்? ஒரு சிறைவாசியை சந்தித்து உபதேசிக்காத பட்சத்தில் தேவனுடைய வழி நடத்துதலின் தேவையை அவனுக்கு எவ்வாறு உணர்த்த முடியும்? விரும்பி வருவோரை மட்டுமே தேர்ந்தெடுத்து அவர்களுக்கு உதவி செய்து போதிப்பதால் இயேசுவின் மாபெரும் இரட்சிப்பின் திட்டத்தை நாம் நிறைவேற்ற முடியுமா? அவருடைய கற்பனைகளை நாம் அலட்சியப்படுத்தினால் இறுதி தீர்ப்பின் நாளிலே வலது பக்கத்திலே வீற்றிருக்கும் பாக்கியத்தை எதிர்பார்க்க முடியுமா? சிந்தித்துச் செயல்படுவோம்.

**மூலம் வீலர் பவுண்ட்ஸ் தமிழில் எஸ்.எஸ். ராஜன்**

# நிச்சயமாய் நடக்கக் கூடியவைகள்

நாம் மிகவும் பயங்கரமான கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற பய உணர்வு மக்களை ஆட்கொண்டிருக்கிறது. இன்றைக்கு நாம் சில காரியங்களைச் செய்ய வாய்ப்பு இருக்கலாம்; இதே நிலை நாளைக்கு நீடிக்கும் என்று சொல்ல முடியாது. இந்த சூழ்நிலை நமக்கு கவலையையும், நம்பிக்கையின்மையையும், சோர்வையும் உண்டாக்குகின்றன.

பரிசுத்த வேதாகமம் கூட, நாளைக்கு என்ன நடக்கும் என்று அறியமாட்டோமே என்று கூறி நம்முடைய அறிவுரைக்கு எல்லை வகுத்திருக்கிறது. யாக் 4: 13, 14. ஆகவே இன்றைக்கு இருந்து நாளைக்கு மறைந்து போகும் அநித்தியமான உலகப் பொருட்களை நம்பி நாம் பெருமிதப்பட்டுக் கொள்ள முடியாது. (மத் 6: 19-21) வாழ்க்கை என்பது இப்படிப்பட்ட நிச்சயமற்ற காரியங்கள் மட்டும் நிறைந்ததா? நாம் நம்பிக்கை வைத்து நிம்மதியாக இருக்கக் கூடிய எதுவுமே இல்லையா? என்று திகைக்காதீர், சில மாறாத நிச்சயங்களும் உண்டு. இதோ! அவைகளில் சில முதலாவது நாம் ''உலகத்தில் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை இங்கிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோவதுமில்லை'' என்று தேவனுடைய ஆவியைக் கொண்டு பவுல் அப்போஸ்தலன் பொதிந்த இந்த வார்த்தைகளைக் கூறிவிட்டு, தொடர்ந்து அவர் ''உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்''

''ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும், அழிவிலும், அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளில் விழுகிறார்கள்,

''பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள்.''

''நீயோ தேவனுடைய மனுஷனே இவைகளை விட்டோடி நீதியையும் தேவபக்தியையும், விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும், சாந்த குணத்தையும் அடையும்படி நாடு''.

**விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு நித்திய ஜீவனைப் பற்றிக் கொள். அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய், அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய்** என்று கூறி வாழ்க்கையைப் பற்றி சில தெளிந்த கருத்துக்களை எடுத்து வைக்கிறார். (1தீமோ 6: 7-12)

வாழ்க்கையில் இரண்டு காரியங்கள் நிச்சயம்; ஒன்று அரசாங்கம் விதிக்கும் வரி, மற்றொன்று சாவு என்றார் ஒருவர். அதில் உண்மையில்லை என்று சொல்லிவிட முடியாது. பவுல் அப்போஸ்தலன் மனிதன் உலகக் காரியங்களுக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது. யாரார்க இருந்த போதிலும் நாம் எப்படி வந்தோமோ அப்படியே திரும்பிப் போவோம் என்பதை விளக்குகிறார். அதாவது நாம் ஒன்று கொண்டு வந்ததுமில்லை, என்றும், நாம் ஒன்றும் கொண்டு போகப் போவதில்லை, என்றும் கூறு-

கிறார். நாம் எப்போதும் நம்முடன் வைத்துக் கொள்ள முடியாத நாம் உலகைவிட்டுப் போகும்போது எடுத்துச் செல்லமுடியாத செல்வத்தை தேடுவதிலும், சம்பாதிப்பதிலும் நாம் இவ்வளவு அக்கரை காட்டுவது மதியீனமான காரியம். அதனால் எப்பொழுதும் நிலைத்திருக்கக் கூடிய நியாயமானதும், நன்மை பயப்பதுமான காரியங்களிலும் நாம் ஈடுபாடு கொள்ள வேண்டும். ''பூமியிலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம் இங்கே பூச்சியும்' துருவும் அவைகளைக் கொடுக்கும் இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள் பரலோகத்தில் உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள் அங்கே பூச்சியாவது, துருவாவது கெடுக்கிறதும் இல்லை. அங்கே திருடர் கன்னமிட்டு திருடுவதும் இல்லை உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இதயமும் இருக்கும் என்றார் கிறிஸ்து (மத்6:19-21

இரண்டாவதாக: கர்த்தருடைய வாக்குத் தத்தங்கள் மாறாதவைகள். பேதுரு, ''தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணிகிறது போல கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்து தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லோரும் மனந்திரும்ப வேண்டும் என்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்'' என்று கூறுகிறார் (2 பேதுரு 3:9) மனிதர் கொடுக்கிற வாக்குறுதிகளை நாம் எந்த அளவுக்கு நம்பலாம் என்பதில் நமக்குக் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் தேவனுடைய வாக்குறுதியைப் பொறுத்த வரையிலும் நாம் நூற்றுக்கு நூறு நம்பிக்கையுடன் இருக்கலாம். **''நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்''** என்கிறார். பவுல் (2 தீமோ 1:12) தேவன் பொய் சொல்லார் என்று அடித்துக் கூறுகிறார். எபிரேய நிருப ஆசிரியர் (எபி 6:18) பொய்யுரையாத தேவன் **ஆதி காலமுதல் நித்திய ஜீவனைக் குறித்து வாக்குத் தத்தம் பண்ணினார்** என்கிறார் பவுல் (தீத்து 1:3) கர்த்தர் தாம் நேசிக்கிற மக்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு வாக்குத் தத்தங்களைக் கொடுத்திருக்கிறார் எடுத்துக்காட்டாக, ''அவர் எப்போதும் நம்மோடே கூட இருக்கிறார். (மத் 28:20) ''அவருடைய தீர்மானத்தின் படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று அறிந்திருக்கிறோம்.'' (ரோமர் 8:28)'' கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.'' (எபெ 1:3) இவைகளையல்லாமல் வேறு பல வாக்குத்தங்களையும் தேவன் கொடுத்திருக்கிறார். அவைகள் அனைத்தையும் ஏற்ற வேளையில் நிறைவேற்றுவார் என்கிற நிச்சயம் நமக்கு உண்டு. ஏனெனில் கடந்த காலத்தில் அவர் கொடுத்திருந்த அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றியிருக்கிறார்.

மூன்றாவதாக மரணமும் நியாயத் தீர்ப்பும் நிச்சயமானவைகள் ''அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்பு அடைவது மனுஷருக்கு நியமக்கப் பட்டிருக்கிறது'' என்கிறார் எபிரேய நிருப ஆசிரியர் (எபி 9 : 27) அப்போஸ்தலன் பவுல் குறிப்பிடுவது போல கர்த்தர் மறுபடியும் வரும் போது சிலர் உயிருடன் இருப்பார்கள் என்றும் அவர்கள் மேகங்கள் வழியாய் ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள் (1 தெச 4:13-18) இப்போதுள்ள மாமிச சரீரத்தோடு ஒருவனும் பரலோகத்துக்கோ அல்லது நரகத்துக்கோ போகமுடியாது என்பதால் எல்லோரும் ஒன்று மரிக்க வேண்டும். அல்லது மறுரூபமாக்கப்பட வேண்டும் அதன் பிறகு நியாயத் தீர்ப்பைச் சந்திக்க வேண்டும். யோபு கூறுவதைப் போல ''ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தமனுமாயிருக்கிறான். (யோபு 14:1) யாக்கோபு ''மேலும் நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்துக்குப் போய் அங்கே ஒரு வருஷம் தங்கி வியாபாரஞ் செய்து சம்பாத்தியம் பண்ணுவோம் என்பவர்களே, கேளுங்கள். நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்ச காலம் தோன்றி பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறதே'' என்கிறார் (யாக் 4:13-14)

நிச்சயமாக நாம் எல்லாரும் மரிக்கப் போகிறோம் ஆனால் அதற்குப் பிறகு என்ன? நியாயத் தீர்ப்பு நிச்சயம் ஆகையால் நமக்குக கொடுக்கப்பட்டிருக்கிற இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கர்த்தருக்குப் பிரியமான வாழ்க்கை வாழ வேண்டும். நாம் மரணத்தை சந்தித்தே ஆகவேண்டும்அதைத் தவிர்த்து விடவோம், தள்ளிப் போடவோ, தப்பித்துக் கொண்டு வேறு வழியில் பரலோகத்தை அடைந்து விடவோ முடியாது. நாம் மரிப்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவுக்கு நியாத் தீர்ப்பை சந்திப்பதும் வெகு நிச்சயம். அந்த நியாத் தீர்ப்பில் நாம் செய்த நன்மைகளுக்கோ அல்லது தீமைகளுக்கோ தக்கதாக நமக்கு நீதி வழங்கப்படுவோம். கிறிஸ்து நம்முடைய நியாயாதிபதியாக இருக்கிறார். (அப் 17:31) அவருடைய வசனங்களின்படி நியாத் தீர்க்கப்படுவோம்- (யோவான் 12:48) மத் 25:46 கூறியுள்ளபடி, பாவம் செய்தவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்கள் நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்.

**நான்காவதாக :** கிறிஸ்து மறுபடியும் வருவார் என்பதை மாறாத நிச்சயம். இயேசு எப்படி எடுத்துக் கொள்ளப்பட்டாரோ அப்படியே திரும்பி வருவார். (அப் 1:11) இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதற்கான சாட்சியங்கள் மறுக்க முடியாத அளவுக்குத் தெளிவாக இருந்த போதிலும் அநேகர் அதை நம்புவதில்லை (1கொரி 15:1-8) அவர் உயிர்த்தெழுந்திராவிட்டால்

மீண்டும் வருவார் என்ற நம்பிக்கை பொருள் அற்றதாயிருக்குமே அவர் கல்லறையினின்று எழுந்து பரலோகத்திலிருக்கிற பிதா-வினிடத்துக்குப் போயிருக்கிறார், என்பது உண்மை ஆகவே மறு-படியும் வருவேன் என்று சொன்ன வாக்குத் தத்தத்தை நிச்சயமாக நிறை வேற்றுவார். ஆயினும் சில பேர் சொல்லி ஆண்டுகள் ஆயி-ங்களாய் உருண்டோடி விட்டன. இதுவரை அவர் வரவில்லை. இனிமேல் வருவது என்பது நடக்கிற காரியமாய்த் தோன்றவில்லை, என்று வாதிடலாம். பேதுரு வாழ்ந்த நாட்களிலும் அப்படிச் சொன்னவர்கள் உண்டு அதற்குப் பேதுரு அளித்த பதிலே இன்-றைய அவிசிவாசிகளுக்கும் பொருந்தும் ''கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருடம் போலவும் ஆயிரம் வருடம் ஒரு நாள் போலவும் ''இருக்கிறதென்றே இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்க வேண்டாம்'' (2 பேது 3: 8) அதாவது நாம் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிற வருடம் மாதம் எல்லாம் அவருடைய பார்வையில் அர்த்தமற்றவைகள். சொல்லி இரண்டாயிரம் ஆண்டுகளாகி விட்டனவே என்பதை வைத்துக் கொண்டு அவருடைய வாக்குத்தத்தங்களை சந்தேகிக்க கூடாது. அவர் காலத்தை வென்றவர்.

இயேசு மறுபடியும் எதற்காக வருகிறார்? இது அநேகருடைய கேள்வி. அவர் மீண்டும் வருவதற்குச் சில காரணங்கள் உண்டு

1. அவருடைய வாக்குறுதியை நிறைவேற்ற.
2. எல்லா காரியங்களுக்கும் ஒரு முடிவு உண்டாக்க.
3. வானத்தையும் பூமியையும் அழித்துப் போட (2 பேது 3; 10)
4. மரித்துப் போன நல்லவர்களையும், தீயவர்களையும் கல்லறை-யிலிருந்து உயிரோடு எழுப்ப (யோவான் 5: 28, 29)
5. மனுக்குலம் அனைத்தையும் நியாயம் தீர்க்க (யோவான் 12 :48)
6. தம்முடைய பிள்ளைகள் அடங்கிய இராஜ்ஜியமாகிய சபையை தேவனிடத்தில் ஒப்புக் கொடுக்க (1 கொரி 15: 24)

ஆம், நண்பர்களே, கிறிஸ்து மறுபடியும் வருகிறார். என்பது மாறாத நிச்சயம். நீங்கள் அவரைச் சந்திக்க ஆயத்தமா? நிச்சய-மானவைகள் என்று கோடிட்டு காட்டப்பட்டுள்ள காரியங்களுக்குச் செவிமடுத்து விசுவாசியுங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவருக்காக வாழ்ந்து அவரைச் சந்திக்க ஆயத்தமாகுங்கள்.

J. C. சோட்

## நன்றி செலுத்துகிறோம்!

1993 - ஜனவரி 26ம் நாள் நாம் திட்டமிட்டபடி "திருமறை ஆசான்" 6வது வாசகர் கருத்தரங்கு ஈரோட்டில் சிறப்புடன் நடைபெற தேவன் நமக்கு உதவிசெய்தார். பல்வேறு இடங்களிலிருந்து வாசகர்கள் வந்திருந்து அரங்கை நிரப்பினர். இதில் கலந்துகொண்ட வாசகர்களுக்கும், இவ்விழா சிறப்புடன் நடைபெற ஒத்துழைத்த அன்பர்களுக்கும், சிறப்பாக செய்தியாளர்களுக்கும் எமது நன்றி!

ஆசிரியர்

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press
Erode-638 003.

Editor. E.Z. Selvanayagam.

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to,
The Editor
THIRUMARI AASAAN
Post Box No: 58 ERODE-638 001.